Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன் (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி (The way of 300,Mandai Road) and other poems

**<u>சன்னல் திரைச்சீலையும்,மரக்கிளையும்</u>**

இந்த வீடு குடி வந்து
ஏறக்குறைய
பதினைந்து ஆண்டுகள்
ஆகிவிட்டன

அந்த
மரக்கிளையும்
என் வீட்டுச்
சன்னல் திரைச்சீலையும்
என்னதான் பேசிக்கொள்ளுமோ?
எந்த நேரமும்
ஒரு சலசலப்பு

திரைச்சீலை
கை ஆட்டி, ஆட்டிப் பேச
கிளையோ
கை நீட்டி, நீட்டிப் பேசும்
அது
அவர்களுக்கான உலகமாயிருந்தது

சில நேரங்களில்
உற்சாகம் கரைபுரண்டோடும்
பறந்தும்,குதித்தும்
விளையாடும்

அவ்வப்போது
கிசுகிசுப்பாய்ப்
பேசிக்கொள்ளும்
ஒருவேளை
இந்தத் திரைச்சீலை
இரவில்
தூங்காமல் இருந்திருக்குமோ?

கோ. இளங்கோவன்  (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி  (The way of 300,Mandai Road) and other poems



சே...
வெட்கங்கெட்ட
திரைச்சீலை!
அக்கிளை மட்டுமென்ன..
இலைகளைத் தொங்கப்போட்டுக் கொண்டு
'ஆ..'வென வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருக்கும்

சாரல் காற்றும்,
மழையும்,இரவும்
இவற்றின் எதிரிகள்
இவர்களைச்
சந்திக்க விடாமல்
சன்னலை மூடுபவை

என் குழந்தைகளின்
கன்னம் தடவும்
திரைச்சீலையை
ஆவலாய்ப் பார்க்கும்
மரக்கிளை...
தானும் முத்தமிட
தலை நீட்டி முயற்சிக்கும்

பேரனைத் தாலாட்டும்
என் அம்மாவின்
மெல்லிய தாலாட்டில்
இரண்டுமே
மெய்சிலிர்த்து நிற்கும்

அம்மா
மறைந்த அன்று
சாரலும்,மழையும்..
நான்

சன்னலைச் சார்த்தவில்லை
அழுதன
மாரிலும்,வயிற்றிலும்
அடித்துக் கொண்டு அழுதுகொண்டேயிருந்தன



நாங்கள்
வேறு வீடு வந்துவிட்டோம்
பழைய வீட்டை விட
இந்த வீட்டில்
பல மடங்கு வசதிகள்!
ஒரே ஒரு குறை-
இங்கு...
சன்னலும் திரைச்சீலையும்
இருக்கிறது,
மரக்கிளைதான் இல்லை,



**300,மண்டாய் சாலை வீதி**

என் மீதான வழிப்பயணம்
எவருக்கும் பிடிப்பதில்லை

என் இருமருங்கிலும்
நிற்கும்
ஓங்கி உயர்ந்த மரங்களுக்கு
எப்பொழுதும்
ஓலமிட மட்டுமேத் தெரிகிறது

என் வீதிக் குயில்கள் கூட
சோக ராகங்களைத்தான்
இன்றுவரை பாடுகின்றன

இளம்பிஞ்சுகளின் ஈர உடல்கள்

Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன் (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி (The way of 300,Mandai Road) and other poems

என்னைக் கடக்கும் போது
கனத்துப் போகின்றன
என் கண்கள்

சாதித்த முதியோர்கள்
சத்தமின்றி கிடக்கும்போது
நன்றிப் பெருக்கில்
நனைந்து போகின்றது நெஞ்சம்

உறுப்பு தானம் வழங்கிய
உடல் இதுவென்று
கேட்ட தருணத்தில்
சிலிர்த்தன என் செவிகள்

மனிதமற்று வாழ்ந்து
மடிந்த பிணங்களைப்
பார்க்கும்பொழுது
மரத்துப் போகிறது மனம்



என் உடலெங்கும்
சிதறிக் கிடக்கின்றன
கோடி வெள்ளிகள்
கோபங்கள்
நான் என்ற திமிர்கள்
நாணயமற்ற நாக்குகள்

யாரோ ஒருவரின்
ஒருவழிப் பயணத்தை
உங்கள் மனித இனம்
ஓர் ஒத்திகையாய்
நினைக்க் நேர்ந்தால்
போதும்

தீவிர வாதத்தின் பிடியில்
சுடுகாடாய் மாறிவரும்
உலகம்
சுகமாகி விடும்

Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன் (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி (The way of 300,Mandai Road) and other poems

**<u>பாலையில் ஒரு விதை</u>**

**(மிக உச்சமாய்,வாழ்வின் இயற்கை எல்லையைக் கடந்து வாழ்பவன்)**

துளிர்க்க வேண்டும்
தழைக்க வேண்டும்
செழிக்கவேண்டும்
நான்
காத்திருந்தேன்

எனக்குக் கால்கள் இல்லை
நடக்க முடியாது
எனக்குச் சிறகுகளுமில்லை
தானாய்ப் பறக்கவும் இயலாது
இடம்பெயர்ந்தேனும்
முளைவிட வேண்டும்
காத்திருந்தேன்

ஏதாவதொரு விலங்கு
யாரேனும் ஒரு மனிதன்
ஏதேனுமொரு பறவை
என்னைச் சுவைப்பதற்காய்
இனிப்பாய் மாறிக்
காத்திருந்தேன்

கொடூரமானப் பற்களுக்கிடையே
நசுங்கிவிடுவேனென்று பயப்படவில்லை
என் மேல் தோல் கடினப்படுத்திக்
காத்திருந்தேன்

யாரோ அல்லது எதுவோ
என்னைச் சுவைப்பதை உணர்ந்தேன்
பற்களின்,நாக்கின்
உருட்டல் மிரட்டலுக்குப் பணியவில்லை

Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன் (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி (The way of 300,Mandai Road) and other poems

எச்சில் சுனாமி எதிர்த்தேன்



செரிமானச் சாறில்
மேல்தோல் உதிர்த்து மென்மையானேன்

கழிவென வெளித்தள்ள...
வீழப்பிறந்தவன் நானல்ல
தோல்வியை வீழ்த்தப் பிறந்தவனெ
ஒரு வெறியுடன்
கழிவையே உரமாக்கிக் காத்திருந்தேன்

கடும் வெயில்
கவனமாய்க் காத்திருந்தேன்
பேய்க் காற்று
பொறுமையாய்க் காத்திருந்தேன்
வெயில்...வெயில்
காற்று...காற்று
ஆண்டுக்கணக்கில்
ஆரவாரமின்றி அமைதியாய்க்
காத்திருந்தேன்

மெல்லத் தோள் தொட்டது
மெல்லிய மழைத்துளி
விருட்டென நிமிர்ந்தேன்
காலத்துடனான ஒரு
ஓட்டப்பந்தயத்திற்குத் தயாரானேன்

காலத்திற்கு ஒரு நொடி
எனக்கோ -அது ஒரு யுகம்
விவேகமான என் காத்திருப்பு
வேகமாய் என்னை வளர வைத்தது

என் இலை,கிளைகளை
வான் நோக்கியும்

வேர்களை நிலத்தின் உள் நோக்கியும்
நீளமாய்
வெகு ஆழமாய்
அதிரடியாய்ச் செலுத்தினேன்



மழைகாணா
வெயிலும் கடும் காற்றுமான
வறண்ட பாலையில்
ஈரிலை விடவும்
எத்தனையோ ஆண்டுகளான
என் காத்திருப்பு.

இன்றோ...
என் இனிக்கும் பழங்களை
எல்லோரும் சுவைக்க
நானோ...
கம்பீரமாய் நிற்கின்றேன்.

நான் தான்-
நம்பிக்கை
எனக்கு
இன்னொரு பெயர்
சிங்கப்பூர்

Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன் (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி (The way of 300,Mandai Road) and other poems

**பெருசு**

வாய்க்கரிசி வாங்குற
நேரத்துல
வாய்க்கு ருசி கேக்குதோ?

போட்டத தின்னுட்டுப்
போத்திகிட்டு கெடக்காம
பொலம்பலென்ன வேண்டிகெடக்கு?

கெழம்னு சொன்னதுக்கு
கேவலைப் பாரு
எழுபதாச்சு..இன்னும்
எளவட்டம்னு சொல்லணுமோ?

கொதிப்புக்கு மருந்து
கொடச்சலுக்கு மாத்திரைன்னு...
இங்கென்ன..
கூரையப் பிச்சிகிட்டு
கொட்டுதோ காசு?

அது கெடக்குது
பெருசு
அது அப்படித்தான்

இதயமற்ற நாக்குகளின்
இரக்கமற்ற வார்த்தைகள்

நன்றி கெட்டோரின்
நரகம் தரும் வார்த்தைகள்

வேரினை மறந்த
மலட்டு விழுதுகளே...

Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன்  (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி  (The way of 300,Mandai Road) and other poems

தேனாய் இனித்ததெல்லாம்
இன்று



வீணாய்ப் போனதுவோ?

தடம் மாறிப் போய்
தடுமாறி நிற்கையில்
கரம் நீட்டிக் காப்பாற்றி
சிரம் சாய்க்க
ஆறுதலாய் நீட்டிய
சுக மடிகள்-இன்று
சுமையாகிப் போனதுவோ?

மூத்த தலைமுறையினர்
நம் மரபு காக்கும்
மாண்புடையோர்!
நடமாடும்
பல்கலைக் கழகங்கள்!

ஆயிரமாயிரம்
அறிவுரைப் பெட்டகங்களை
உள்ளடக்கியிருக்கும்
பட்டறிவுக் கருவூலங்கள்

பார்புகழும் சிங்கைக்குப்
படிக்கற்களாய் நின்றோர்க்குப்
பேருந்தில்
அமர இடம் கொடுக்க
அவ்வளவு தயங்குவதேன்?

ஏற்றமிகுப் பெரியோர்கள்
எதிரில் வந்தால்
சட்டென விலகாமல்
குட்டியாய்ப் புன்னகைத்தால்

குளிராதோ அவர் நெஞ்சம்?

ஊண் மறந்து
தான்" மறந்து
உங்களை



உயிரெனச் சுமந்தவர்களை
உங்கள்
முதுகில் சுமக்க வேண்டாம்
முன் எதிர்ப்படும்போது
முகம் சுழிக்காமலிருங்கள்-அது
போதும்!

அவர்கள்
அப்படி என்ன
"பெருசாய்"க் கேட்டுவிடப் போகிறார்கள்?
அன்பான பார்வையும்
ஆறுதலாய்ச் சில வார்த்தைகளையும் தவிர!

Tamil Poetry – First Prize

கோ. இளங்கோவன் (Go. Elangovan)

300, மண்டாய் சாலை வீதி (The way of 300,Mandai Road) and other poems

**<u>சுவாசம்</u>**

அது என்ன,,
அவ்வளவு புனிதமானதா-
சுவாசத்தை விட!

அது என்ன...
அவ்வளவு அழகானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு எளிதானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு கனிவானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு மதிப்பானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு இனிமையானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு கருணையானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு சுகமானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு வலிமையானதா-



சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு முக்கியமானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு உயர்வானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு கலையானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு நுட்பமானதா-
சுவாசத்தை விட

அது என்ன...
அவ்வளவு வேகமானதா
சுவாசத்தை விட

சரி ,,,போகட்டும்

மூச்சை விடப்
பிறிதொன்று
பெரிதென்றால் - பின்
மூச்செதற்கு?